# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு - 8 (Year 8)

## 1/09/2011 - 31/08/2012 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

### போட்டி நடைபெறும் திகதி 09/11/2024

### நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

## மகாகவி பாரதியார்

பாரதி யார்? எப்படி இப்பெயரைப் பெற்றார்? சுப்பிரமணியம் என்பது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர். சுப்பையா என்பது இவரது செல்லப்பெயர். பாரதி என்னும் பட்டப்பெயர் இவருடைய 11 வயதில் எட்டயபுரச் சமஸ்தானப் புலவர்களால் இவரது தமிழ்ப் புலமைக்காக கொடுக்கப்பட்டது. இப்பட்டப் பெயரே இவரது பெயருடன் ஒட்டி நிரந்தரமாக சுப்பிரமணிய பாரதி என்று ஆகியது. அத்துடன் இவருக்கென்று மீசையும் தலைப்பாகையும் வந்து சேர்ந்து கொண்டன.

பாரதியார் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் என்ற ஊரில் தமிழன்னையின் தவப்புதல்வனாய்ப் 1882 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சின்னசுவாமி. தாயார் பெயர் இலட்சுமி அம்மையார். இவர் ஐந்து வயதில் தனது தாயாரை இழந்தார்.

தனது ஏழு வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கிவிட்டார். இளம் வயதிலேயே தமிழில் ஆர்வம் கொண்டதால், பதினோராவது வயதிலே பாரதி என்ற பட்டம் பெற்று எட்டயபுர அரண்மனைப் புலவரானார். இவர் மாபெரும் கவிஞர் மட்டுமல்ல, சிறந்த உரைநடை எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியரும் கூட.

பாரதியாரின் கவிதைகள் சிறப்பானவை. எளிதில் விளங்கக் கூடியவை. பாரதியார் நாட்டுப் பற்றும், தமிழ்பற்றும் உடையவர்.

" செந்தமிழ் நாடெனும் போதினிலே -இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே..." என்று தமிழைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

சிறு பிள்ளைகளுக்காக அநேக பாடல்களைப் பாடியுள்ளார்.

" ஓடி விளையாடு பாப்பா- நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா..."
" பொய் சொல்லக்கூடாது பாப்பா..." என்றும் புறம் சொல்லல் ஆகாது பாப்பா"
இவ்வரிகள் இவர் குழந்தைகளுக்குச் சொல்லும் அறிவுரைகளாகும்.

இதைவிட இவர் பெண் விடுதலைக்குரிய பல பாடல்களைப் பாடியுள்ளார். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே..." எனப்பாடியுள்ளார். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனவும் பாடியுள்ளார். மேலும் இவர் பெண் விடுதலைக்காகவும், குழந்தைத் திருமணத்திற்கு எதிராகவும், சாதி மறுப்புக்காகவும் தனது குரலை எழுப்பினார், தேசபக்தியைத் தூண்டும் பாடல்களைப் பாடி மக்களுக்கு சுதந்திர வேட்கையை ஊட்டினார்.

நாமும் அவரது வழியில் நின்று தமிழை வளர்க்கப்பாடுபடுவோம்